# ஆயுர்வேத மருத்துவத்தில் ஜம்மியின் வயது — 85

ஆயுர்வேதா என்பதற்கு நீடிய ஆயுளுக்கான வழிவகைகளைக் கூறும் சாஸ்திரம் என்பதே பொருள். இது நான்கு வேதங்களில் ஒன்றான அதர்வணத்தைச் சேர்ந்தது. உபான்கா-உபவேதம் என்றும் கூறுவார்கள். அவ்வளவு சிறப்புள்ளது. படைப்புக் கடவுளான பிரம்ம தேவர் தேவலோக வைத்தியர்களான அஸ்வினி என்ற இரட்டையர்களுக்கு முதல் முதல் அளித்தார். பிறகு இந்திரன், முனிவர்கள் வழியாக மக்களிடையே பரவியது என்பது புராண வரலாறு.

டாக்டர் ஜம்மி வேங்கடரமணு



பூர்வீக இந்தியாவில் கானகங்களில் அமைக்கப்பட்ட பர்ணசாலைகளில் முனிவர்களால் குருகுல முறையில் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டது. தட்சசிலம், காசி, நாலாந்தா முதலிய பெருநகரங்களில்-மருத்துவ மையங்களில் விரிவாகவும் பயிற்சி அளிக்கப்பட்டது. மாமன்னர்களும், குறுநில மன்னர்களும் முழு ஆதரவளித்து தேர்ச்சிபெற்ற மருத்துவர்கள் மூலம் மக்களுக்குப் பயன்படுத்தி வந்தனர்.

கிரேக்க படையெடுப்பால் இது இந்திய மருத்துவர்களுடன் கிரேக்க நாட்டிற்குக் கொண்டுபோகப்பட்டது. அவர்கள் யுனனி மருத்துவத்துடன் கலந்தனர். மீண்டும் புது மெருகுடன் இந்தியாவிற்குள் புகுந்து மொகாலயர்கள் காலத்தில் கொடி கட்டிப் பறந்தது. ஆயுர் வேதத்தை அடிப்படையாகக் கொண்டுதான் தமிழகத்தில் சித்தர்களால் மூலிகை சித்த மருத்துவம் ஏற்பட்டது.

நமது மண்ணிற்கே உரித்தான பெருமை சேர்க்கக்கூடிய ஆயுர்வேதம் ஆங்கிலேயர் வருகையால்—அவர்களின் அலோபதி மருத்துவத்தால் செல்வாக்கு குன்றி மக்களால் ஒதுக்கப்படும் நிலையை அடைந்தது. ஆனாலும் பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவ குடும்ப அறிஞர்கள் இதன் சிறப்பைக் கைவிடாது பேணி வளர்த்தார்கள்.

ஆந்திரா விஜயநகரத்தை அடுத்துள்ள ஒரு கிராமத்தில் ஆயுர்வேத மருத்துவ குடும்பத்தைச் சேர்ந்த டாக்



ஜம்மி பில்டிங்கிலுள்ள க்ளினிக்கில்...

டர் ஜம்மி வேங்கட ரமணய்யா, டாக்டர் வட்லமாணி சூர்யநாராயண சாஸ்திரி என்ற வைத்திய மேதையிடம் முறையாகப் பயின்று 1900-ல் தொழிலை ஆரம்பித்தார். பாலரோக, உதர ரோக, எக்ரு தோதரம், பிளிகோதரம் போன்ற குழந்தை நோய்களுக்கு ஆரம்பத்தில் சிகிச்சை அளித்து வந்தார். இந்தியாவில் மட்டுமே இருந்துவந்த Indian childhood Sirrhosis என்ற குழந்தை நோய்க்கு அந்தக் காலத்தில் அலோபதியில் மருந்தே இல்லை. இவர் அதற்கான புதிய ஆயுர்வேத மருந்தை சுயமாகக் கண்டுபிடித்து சிகிச்சை அளித்து நல்ல புகழோடு விளங்கினார்.

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வராகப் பிரபலமாக விளங்கிய டாக்டர் திருமூர்த்தி விசாகப்பட்டணத்திலிருந்தபோது—குழந்தைகளின் ஈரல், மண்ணீரல் நோய்களைக் குணமாக்குவதில் தனிப்பெரும் நிபுணர் என ஏற்றத்துடன் திகழ்ந்த டாக்டர் ஜம்மி வேங்கட ரமணய்யாவை சென்னைக்கு ஒரு நோயாளியைப் பார்க்க அழைத்து வந்தார். அந்த நோயாளி ராவ்பகதூர் ரெங்கநாதய்யர் மகன் தொழில் அதிபர் ராஜகோபாலய்யர். அலோபதி டாக்டர்களால் கைவிடப்பட்டவர். அவரைக் குணப்படுத்தியதோடு ஒரேயடியாக சென்னையில் தங்கி தனது தொழிலைத் தொடர்ந்து இவர் நடத்திவந்தார்.

இவர் நாடி பார்ப்பதிலும் தனிப்பெரும் நிபுணர். அதற்கு ஓர் எடுத்துக்காட்டான சம்பவம். இவர் ஆந்திராவில் இருக்கும்போது தனது தந்தையின் சிரார்த்த தினத்தன்று சடங்கை நடத்தி வைக்க வந்த குருக்களின் காலைக் கழுவும்போது நாடிமூலம் அவர் அந்திம நேரத்தை அறிந்த உடனே, இவர் தன் மகனை அழைத்து குருக்களைப் பாதுகாப்புடன் அவர் இல்லத்தில் கொண்டு போய் விடும்படி பணித்தார். இவர் அனுமானித்தபடி குருக்கள் தன் இல்லம் சேர்ந்த சிறிது நேரத்தில் இறந்து விட்டார்—இதுபோல் ஜம்மியின் வாழ்நாளில் நடந்த அரிய சம்பவங்கள் எத்தனையோ!

தமிழகத்திலேயே தங்கி தமிழரில் தமிழராக ஆயுர்வேத வைத்தியத்தின் மேன்மையை தனது அரிய சேவையால் வளர்த்த இவர், தனது மூன்று மகன்களையும் தனது தொழிலில் பயிற்சி அளித்து வைத்திய நிபுணர்



டாக்டர் ஜம்மி வேங்கட ரமணய்யா

களாக உருவாக்கினார். இவர் தயாரித்த மருந்துகள் 'ஜம்மிஸ் லிவர்க்யூர்' என்ற பெயரில் பல நோய்களுக்கு கைகண்ட மருந்தாக தமிழகத்தில் மட்டுமல்ல; வெளிநாடுகளிலும் பிரபலமாகின. இந்திய-சமஸ்தான மன்னர்களும், ஆங்கில அதிகாரிகளும், அறிஞர் பெருமக்களும் இவருக்கு ஏராளமான நற்சான்றிதழ்களும், பரிசுகளும் அளித்து கௌரவித்தனர். 1938-ல் 'சிசு வைத்திய நிஷாந்தா' என்ற மிகப்பெரிய வைத்திய விருது பெற்ற டாக்டர் ஜம்மி வேங்கட ரமணய்யா 1939-ல் மறைந்தார்.

தந்தை பெயரில் ஜம்மி வேங்கட ரமணய்யா அண்ட் சன்ஸ் என்ற ஒரு நிறுவனத்தை அவரது மூன்று குமாரர்களும் நிறுவினார்கள். நவீன இயந்திரங்களுடன் மருந்து தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். முன்னாள் சென்னை முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அதைத் திறந்துவைத்தார். ஆயுர்வேத மருந்துகளைத் தயாரித்து விற்பனைக்கு அனுப்பினர். இன்று ஆண்டுதோறும் பல லட்சம் ரூபாய்க்கு விற்பனையாகின்றன. 85 வருடங்களாக வெற்றிகரமாக வளர்ந்துவரும் இவர்களின் 40 விதமான ஆயுர்வேத மருந்துகள் ஜம்மிஸ் லிவர்க்யூர் என்ற பொதுப்பெயரில் இருக்கின்றன

மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்த டாக்டர் ஜம்மி வேங்கட ரமணய்யாவின் பேரர் டாக்டர் ஜம்மி வேங்கட ரமணா இப்பொழுது நிறுவனத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்று திறம்பட நிர்வகித்து வருகிறார். துடிப்புள்ள இளைஞரான இவர் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றாலும், தன் தந்தை டாக்டர் ஜே.பி.எல். நரசிம்மம், பெரிய தந்தைகள் டாக்டர் ஜே.எல். நரசிம்மம், ஜே.வி.பத்ரி நாராயணா ஆகியோரிடம் முறையாக ஆயுர்வேத வைத்திய பயிற்சிபெற்று—அதே வைத்தியத்தையே செய்துவருகிறார். இவருக்கு உதவியாக 15 டாக்டர்கள் பணிபுரிகிறார்கள்.

மாதந்தோறும் 224 இடங்களில் சிகிச்சை அளிக்கிறார்கள். நோயாளிகளைப் பரிசோதிப்பதற்கென்று தனிக்கட்டணம் இவர்கள் வாங்குவதில்லை என்ற நியதியைக் கொண்டிருக்கிறார்கள். கொடுக்கும் மருந்துக்கு மட்டுமே பணம் வாங்குகிறார்கள்.

"பசி குறைவு, வயிறு உப்புதல், மலச்சிக்கல், மலம் வெள்ளையாகப் போவது, மூத்திரம் உப்புபோல் உறைதல், பலகீனம், சிடுசிடுப்பு, கைகால், வயிறு இளஞ்சூடாக இருத்தல், குழந்தைகள் அடிக்கடி குப்புறப் படுப்பது—இவை எல்லாமே ஈரல் வியாதிக்கான அறிகுறிகள். ஈரல் நோயுற்றால் மஞ்சள் காமாலை எளிதில் வந்துவிடும்" என்கிறார் டாக்டர் ஜம்மி வேங்கடரமணா.

—பி.ஏ. தாஸ்

---

**கைகூப்பும் குரங்கு...**

மேற்கு ஜெர்மனியிலுள்ள மிருகக் காட்சிசாலையில் இருக்கும் ஒவ்வொரு மிருகத்தையும் வெறும் காட்சிப்பொருளாக மட்டும் வைக்காமல் பயன்தரும் பலப்பல வேலைகளைச் செய்யவும் பழக்கி இருக்கிறார்கள்.

இங்குள்ள யானை புலிகள், ஒட்டைச்சிவிங்கிகள் பல சர்க்கஸ் வேலைகளை தத்ரூபமாக செய்து காட்டி தங்களைப் பார்க்க வருகிற வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெறுகின்றன. சிம்பன்சி குரங்குகள் தங்களைப் பார்க்க வந்தவர்களை 'போட்டோ' எடுப்பது, கைகளை கூப்பி வரவேற்பது போன்ற காரியங்களைச் செய்து மெய்சிலிர்க்கச் செய்கின்றன.

சாதாரண குரங்குகள் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது, மிருகங்களுக்குத் தீனி போடுவது போன்ற வேலைகளை செய்கின்றன.

காதர்